# புதிய காங்கேசன் துறைமுக பாலம் சரியாக அமையவில்லை: தொழிலாளர் புகார்

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 மலர் 9
போன் 389 National Tamil Daily இதழ் 305. தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 18 ஜ: ஆகிர் 29 புதன்கிழமை [4-10-'7]

காங்கேசன்துறை, செவ்.

காங்கேசன்துறையில் மூன்றரைலட்சம் ரூபா செலவில் கட்டப்படும் இரண்டுபாலங்களைக்கொண்ட இறங்கு துறைமுகம் துறைமுகத் தொழிலாளர்களுக்கு வசதியளிக்கும் முறையில் அமையவில்லையெனவும் உல்லாச சப்பிரயாணிகள் கப்பலைப் பார்வையிடச் செல்வதற்காக கட்டப்பட்டுள்ளதாக அமைந்திருப்பதாகவும் யாழ். மாவட்ட துறைமுகத் தொழிலாளர் சமாசத் தலைவர் திரு. சிக்மறிங்கம் மற்றும் பல துறைமுகத் தொழிலாளர்கள் நமது நிருபரிடம் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

103 யார் நீளமுள்ள இவ்விரு பாலங்களும் ஒரு கார் போகமுடியாத அளவில்

[6-ம் பக்கம் பார்க்க]

## தமிழ்ப் பகுதிகளில் விவசாயப்படை:

# தமிழரசின் ஆலோசகராக தீவுப்பகுதி எம். பி. இருப்பார்

## கல்முனை இடைத் தேர்தலில் போட்டியிடவும் முடிவு

### தமிழரசு செயற்குழுவின் தீர்மானங்கள்

— நமது நிருபர் எஸ். திருச்செல்வம் —

யாழ்ப்பாணம், புதன்

அரசாங்கம் அமைத்து வரும் விவசாயப் படைக்கு விண்ணப்பித்த சுமார் 3,000-க்கும் மேற்பட்ட தமிழ் வாலிபர்களைக் கொண்ட விவசாயப் படைகளைத் தமிழ்ப் பகுதிகளில் நிறுவ தமிழரசுக்கட்சியின் சார்பில் அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு ஆவன செய்யும் முழுப் பொறுப்புக்களையும் தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினத்திடம் ஒப்படைத்துள்ளது.

நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக்கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்திலேயே இவ்வித தீர்மானம் செய்யப்பட்டு இப் பொறுப்பு திரு. நவரத்தினத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கல்முனைத்தொகுதி இடைத் தேர்தல் அபேட்சகர் நியமனம்பற்றி விசேஷமாக ஆராயப்பட்டது. கட்சிச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் இது சம்பந்தமாகத் தெரிவிக்கையில் தமிழரசுக்கட்சிசார்பில் ஒரு அபேட்சகரை இங்கு நியமிக்க அரசாங்கக்கட்சியின் தலைவர்கள் ஒப்புக்கொண்டிருப்பதாகவும்கட்சி

[6-ம் பக்கம் பார்க்க]

யாழ் மாவட்ட குடியேற்ற திட்டம்

## 2000 ஏக்கர் காணி ஓராண்டில் விநியோகிக்கப்படும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் குடியேற்றத் திட்டத்தின் கீழ் இதுவரை 6544 ஏக்கர் காணிகள் பொது மக்களுக்கு விநியோகிக்கப் பட்டுள்ளது. மேலும் இக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் சுமார் 2000 ஏக்கர் காணிகள் 1968ம் ஆண்டுக்கிடையில் விநியோகிக்கப் படவிருப்பதாகத் தெரிகின்றது.

நெல் விளைச்சல், உப உணவுற்பத்தி என்பனவற்றிற்காக வழங்கப்பட்ட இக் காணிகளில் சுமார் 3100 ஏக்கர் காணி இதுவரை துப்புரவு பண்ணப் பட்டுள்ளதாக புள்ளி விபரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது. வழங்கப்பட்ட 6544 ஏக்கர் காணியில் 4862 ஏக்கர் காணியே இந்த நெல் விளைச்சல் உப உணவு உற்பத்தி என்பனவற்றிற்காக விநியோகிக்கப் பட்டது. இதில் இப்போது சுமார் 2000 ஏக்கர் காணியில் இவைகள் பயிரிடப் படுவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இக் காணிகளில் சுமார் 650 ஏக்கர் காணிகளில் படித்த வாலிபர்களும், பெண்களும் குடியேற்றப் பட்டுள்ளார்கள். வழங்கப்பட்ட முழுக்காணியிலும் உப உணவுப் பொருட்கள் பயிரிடப் பட்டால் வட பகுதிக்குத் தேவையான உப உணவுப் பொருட்கள் முழுவதையும் இங்கேயே பயிரிடலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

அடுத்த ஆண்டில் படித்த வாலிபர்களுக்காக நிறுவப் படும் குடியேற்றத் திட்டங்களில் தென்னைச் செய்கை முக்கிய இடம் வகிக்கும். இலங்கைத் தெங்குப் பொருட்களுக்கு உலகின் பல பாகங்களிலும் போதிய மதிப்பு இருப்பதினாலேயே இத் திட்டம் இங்கு அமுலுக்கு வரவிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. [ந. நி]

## பிரதமர் இன்று மலேசியா போகிறார்

கொழும்பு, புதன்

பிரதம மந்திரி திரு. டட்லிசேனநாயகா இன்று விமான மார்க்கமாக மலேசியாவுக்குப் புறப்பட்டுப் போகவிருக்கிறார்.

இன்று காலை 7-30 மணிக்கு பிரதம மந்திரி காரில் ஊர்வலமாக கட்டுநாயகா விமான நிலையம் போய்ச் சேர்வார். அவருடன் பிரதம நீதியரசர், செனட்சபைத் தலைவர், பிரதிநிதிகள்கள் சபை சபாநாயகர் ஆகியவர்களும் விமான நிலையத்துக்குச் செல்வார்கள்.

விமான நிலையத்தில் பௌத்த குருமார்கள் பிரித் ஓதுவார்கள். அங்கு கவர்னர்ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ பிரசன்னமாய் இருப்பார். பிரதமர் மலேசியாவிலிருந்து அக்டோபர் 8-ந் திகதி இரவு இலங்கை திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மலேசியாவில் அந்நாட்டு பிரதம மந்திரி துங்கு அப்துல் ரகுமானுடன் இலங்கை ஆசிய நாடுகளின் பொருளாதாரக் கூட்டில் சேருவது பற்றியும் பாவனைப் பொருட்களின் விலைகளை தரப்படுத்துவது பற்றியும் ஆலோசனைகள் நடத்துவார் என்று தெரிகின்றது.

பிரதம மந்திரியின் சிங்கப்பூர் பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

## நித்திரை செய்கையில் தீ பற்றியதாம்

### ஆஸ்பத்திரியில் இளம் பெண்

யாழ்ப்பாணம், புதன்

தீ விபத்தில்சிக்கிப் படு காயங்களுக்குள்ளான இளம் பெண் ஒருவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் உரும்பராயில் நடைபெற்றது.

காயங்களுக்குள்ளான விஜயலட்சுமி என்பவர் சம்பவம் நடந்த இரவு அறையைப் பூட்டிவிட்டு. புத்தகம் ஒன்றை வாசித்துக்கொண்டு நிலத்தில் படுத்திருந்ததாகவும், சிறிது நேரத்தில் அவர் நித்திரையாகிவிடவே அருகிலிருந்த மண்ணெண்ணை விளக்கு இவரது உடலில் பற்றியதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மூன்று தினங்களாகிய போதிலும் இவர் இன்னமும் அறிவிழந்த நிலையிலேயே இருப்பதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ந. நி.]

## தமிழ் காங்கிரஸ் செனட்டரை பார்லிமெண்ட்குழு தெரிவுசெய்யும்

யாழ்ப்பாணம், புதன்

தமிழ்க்காங்கிரஸ் சார்பில் யாரை செனட்டராக்குவதென்ற விஷயம் நேற்று யாழ்ப்பாணம் தமிழ்க் காங்கிரஸ் காரியாலயத்தில் நடைபெற்ற கட்சிச் செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப் பட்டது.

கட்சித் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவாளர்கள் தா. சங்கரப்பிள்ளை, நீதிராஜா ஜே. பி; ஏ. தெட்சணாமூர்த்தி, முன்னாள் செனட்டர் எஸ். ஆர். கனகநாயகம் ஆகியோரது பெயர்கள் இப் பதவிக்குப் பிரஸ்தாபிக்கப் பட்டன.

திரு. சங்கரப்பிள்ளைக்கே அதிக ஆதரவிருக்ககாகத் தெரியவருகிறது. இதுபற்றி தீர்க்கமான முடிவைகட்சியின் பாராளுமன்றக்குழு மேற்கொள்ளுமெனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் கட்சிசார்பில் அபேட்சகர்களை நிறுத்துவதுபற்றியும் இங்கு ஆராயப்பட்டது. (ந. நி.)

### சொற்பொழிவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண செயலக நலவுரிமைச் சங்கத்தின் ஆதரவின் கீழ்இளைப்பாறிய அரசாங்க தர்மகர்த்தா திரு வி. எம். குணரத்னு 'மறுபிறப்பு' பற்றி வரும் வெள்ளிக்கிழமை சொற்பொழிவாற்றவிருக்கிறார். செயலக மகாநாட்டு அறையில் இச் சொற்பொழி நடைபெறும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தெய்வத்திடம் நமக்கு நம்பிக்கை இல்லாதபோது பல பல பிரச்னைகள் கிளம்புகின்றன. அவரிடம் நாம் பூரண நம்பிக்கை வைத்த அதே நொடியில் நமது பிரச்னைகள் எல்லாம் உடனடியாகத் தீர்ந்து விடுகின்றன.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு
Eelanadu 'National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞு புரட்டாதி மீ 18வ (4-10-67)

## சபாஷ் பேராதனை!

பேராதனையிலுள்ள நமது இலங்கை பல்கலைக் கழக மாணவர்களை மனமாரப் பாராட்டக் கூடிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததுபற்றி நாம் உண்மையில் மகிழ்ச்சியடைகிறோம்

சர்வகலாசாலையில் புதிதாகச் சேர வந்த பல வெளி மாணவர்களை புகையிரத நிலையத்தில் வரவேற்று அவர்களை சர்வகலாசாலையிலுள்ள விடுதிகளுக்கு அழைத்துச் செல்ல வேண்டிய உதவிகளை மூத்த மாணவர்கள் செய்தமைக்காக அவர்களைப் பாராட்டுகின்றோம்.

கல்லூரி படிப்புமுடிந்து சர்வகலாசாலையில் சேருவதற்காக முதல் முதலாகச் செல்லும் மாணவர்கள் சாதாரணமாக ''வயிற்றில் நெருப்புக் கட்டிக் கொண்டு'' போவது வழக்கம். மூத்த மாணவர்கள் தங்களை என்னென்ன சிறுமைகளுக்கும் இம்சைகளுக்கும் ஆளாக்குவார்களோ என்று பயந்து பயந்து செல்லுவர். 'ராக்கிங்' என்ற பெயரால் வெட்கக்கேடான காரியங்களும் நடப்பதுண்டு. இங்கு மட்டுமல்ல தமிழகத்திலும் இந்த வழக்கம் நுழைந்து ஒரு மாணவர் தற்கொலை செய்து கொள்ள வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இலங்கையிலும், தமிழகத்திலும் அதிகாரிகள் இக்கூடாத வழக்கத்துக்கு ஒரு முற்றுப்புள்ளிவைக்க மிகக்கண்டிப்பான நடவடிக்கை எடுத்து, பல மாணவர்களைத் தண்டித்தனர். சிலரை வெளியேற்றினர். இக்கூடாத வழக்கம் வேண்டாமென்று தமிழக அமைச்சு மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தது. இதன் பயனாக தமிழகத்தில் நல்ல பயன் ஏற்பட்டு புதியவர்களை மூத்த மாணவர்கள் இப்படி செய்வதற்கு பதில் அன்புடன் உதவி செய்துள்ளனர். இலங்கை பேராதனையிலும் இவ்விதம் பழைய வழக்கத்தில் நல்ல மாறுதல் ஏற்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும். இதற்காக சர்வகலாசாலை அதிகாரிகளையும் சிறப்பாக மாணவர்களையும் நாம் பாராட்டுகின்றோம். இது தான் உண்மையான நல்ல புரட்சி.

எடுத்ததற்கெல்லாம் மாணவர்களைக் குறை கூறுவதும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதும் வழக்கமாகி வருவதைப் பார்க்கிறோம். அதுவும் இப்போது அண்டை நாடான இந்தியாவிலே மூலைக்குமூலை மாணவர் கிளர்ச்சிகள் கிளம்பி, உயிருக்கும் உடமைகளுக்கும் பெரும் நாசங்கள் ஏற்பட்டு வருகின்றன. நாட்டின் எதிர்காலத்தலைவர்களான பல்கலைக்கழக மாணவர்கள் ஏன் இப்படிச் செய்ய வேண்டும்? இதன் மூல காரணங்களை ஆராய்ந்தறிந்து, அவற்றை நீக்கத்தக்க முயற்சிகளை எடுப்பின் இக்கிளர்ச்சிகளும் அடங்கி, மாணவர் மேலான முறையில் நடந்து நாட்டுக்கு மேலான பணிசெய்ய முன்வருவரென்பதில் ஐயமில்லை.

கஷ்டபபட்டு படித்து பரீட்சையில் தேறியும முதலில் ஜீவனத்துக்கான வேலையும் கிடைக்குமென்ற உத்தரவாதமில்லாததால், மாணவர்களிடையே ஏமாற்றமும எதிர்காலத்தைப்பற்றிய நமபிக்கையின்மையும் ஏற்படுவது இயற்கை. படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் அரசாங்கம் வேலை தேடித்தருமென்று எதிர்பார்ப்பது முடியாதுதான். ஜனநாயக சுதந்தர நாடுகளில் அவரவர்கள் தங்களுக்கான வேலையைத் தேடிக்கொண்டு வாழ்க்கைப் போரை நடத்தவேண்டியுள்ளது. ஆனல் இதற்கான பயிற்சியும் கல்லூரிகளில் அளிக்கப்படுவதில்லை. இந்நிலையில் மாணவர்களிடையே கிளர்ச்சிகள் ஏற்படாமல் எப்படி இருக்கமுடியும்? அவர்கள் தங்கள் உணர்ச்சிகளைவேறு எப்படித்தான் தெரிவிப்பது?

சில அரசியல்வாதிகள் இந்த நிலைமையைப் பயன்படுத்தி சர்வகலாசாலை மாணவர்களுக்குள்ளாக வேற்றுமைப் பிளவுகளையும் ஏற்படுத்தி வருவதுமுண்டு. மாணவர்களின் அன்பையும் அபிமானத்தையும் பெறும் வகையில் சர்வகலாசாலை நிர்வாகிகளும் பேராசிரியர்களும் நடந்து மாணவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டால், வெளியார்களால் விஷமங்கள் ஏற்படாமல் வெகுவாகத் தடுக்கலாம்.

பேராதனை மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள இந்த நல்ல மாறுதல் பற்றி நம் சர்வகலாசாலையினர் பெருமைப்படலாம் இதைப்பின்பற்றி அறிவாளியான நம் மாணவர்களை நாட்டுக்கும் தங்களுக்கும் மேலான நன்மைபயக்கும் படியாகச்செய்யலாமென்பதற்கு இந்த வரவேற்கத்தக்க மாறுதல் ஒரு நல்ல சகுனமுமாகும்.

# நவராத்திரியும் கல்வி நிலையங்களும்

— க. வை. ஆத்மநாதசர்மா —

**இன்று முதல் ஒன்பது நாட்களுக்கு கொண்டாடப்படும் நவராத்திரிவிழா கல்விநிலையங்களில் ஏன் முக்கியமாகக் கொண்டாடப்படவேண்டும், விழாக் காலத்தில் மாணவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதையெல்லாம் இக் கட்டுரை மிகத்தெளிவாக விளக்குகிறது.**

கல்விநிலைய வழிபாடுகளில் நவராத்திரி வழிபாடு மிகவும் முக்கியமானது. காரணம் அது அன்னை வழிபாட்டை முக்கியமாகக்கொண்டதே. தாயைப் பேணுத சேய் உலகத்தில் இருக்கலாம். ஆனல் தாய் விரும்பாதசேய் உலகத்தில் இருக்கவேமுடியாது. ஒரு பெற்ற தாய்க்குத் தன்குழந்தையிடத்தே உண்டாகும் பாசத்தைத் தடுக்க எவராலும் முடியாது; எந்தச் சட்டமும் இடம் தராது. சாதாரணமாக ஒரு மனிதத் தாயில் அன்பு அப்படியாயின், உலகம் முழுவதற்கும் தாயாகிய அன்னை பராசக்திக்குச் சிறுகுழந்தைகளிடம் உண்டாகும் அன்பைப்பற்றி கேட்கவும் வேண்டுமா? ஆகவேதான் நவராத்திரிவிழாவென்பது ஒவ்வொருபாடசாலையிலும் முறையாகநடத்தல்படவேண்டும். அந்த விழாவின் அடிப்படையான தத்துவங்கள் சாதனையாகவும் போதனையாகவும் ஒவ்வொரு சிறுவரது உள்ளத்திலும் நன்கு பதிக்கப்படவேண்டும்.

உள்ளம் கனியவேண்டுமாயின் அதாவது அன்பு, கருணை, இரக்கம் என்றெல்லாம் குறிக்கப்படும் நல்ல பண்புகள் ஒருவரது உள்ளத்தில் சுரக்கவேண்டுமாயின் அது அன்னையின் திருவருளாலன்றி அமையாது. அந்தப் பண்புகள் உள்ளத்தில் சுரக்காவிடின் மனிதவாழ்வே வாண்டு கசப்பாகிவிடும்.

தாய்மை உணர்ச்சியை ஒவ்வொரு தாய்க்கும்அளிப்பவர் உலகமாதாவாகிய **அன்னை பராசக்தியேயாவர்.** ஆகவே எப்போதும் அன்னை பராசக்தியை நாம் மறவாதிருத்தல் வேண்டும். மறவாதிருப்பதற்கு அடையாளமாகவே அம்மையப்பரை அநுதினமும் வணங்கிவருதல்வேண்டும். நவராத்திரி காலத்திற் சிறப்பாக வழிபாடு செய்தல வேண்டும்.

அன்னைவழிபாடு அல்லது சக்தி வழிபாடு என்று குறிப்பிடும்போது அங்கும்சிவவழிபாடு இருக்கிறது இதனை உலகுக்கு உணர்த்தவே இறைவன் அர்த்த நாரீசுவரராக-பாதி ஆண்வடிவமும் மறுபாதி பெண் உருவமுமாக காட்சி கொடுத்தருளுகிறார். இதனைக்குறிக்கவே,

'அம்மையே அப்பா ஒப்பிலாமணியே' எனமணிவாசகரும்;

'அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ, அன்புடைய மாமனும் மாமியும்நீ' என வாகீச வள்ளலாரும்;

'தோடுடைய செவியன் விடையேறி, ஓர்தூவெண் மதிசூடி' என ஆளுடைய பிள்ளையாரும் எடுத்துக் காட்டியுள்ளனர்.

தந்தையிடம் ஒரு பயனைப் பெறவிரும்பும் பிள்ளைகள் தாயின்மூலமாக அதனைப் பெறுதல்போல, நவராத்திரி வழிபாடானது மாணவர்களாகிய சிறுவர் சிறுமியர் தாம் பெறவிரும்பும் பேறுகளுக்கெல்லாம் வாய்ப்பான சிவபூஜையேஎன்று சொல்லலாம்

ஒருகுழந்தையானது பசியினல் அழுகிறதா, நித்திரை செய்யவேண்டி அழுகிறதா, அச்சத்தினல் அழுகின்றதா, புதுமைகண்டு பொழுதுபோக்கவழியின்றி அழுகின்றதா என்பவற்றை, அக குழந்தையைப்பெற்றதாயே அறிவாள். உலக மக்களாகிய நாமோ இறைவனது திருக்குழந்தைகள். எப்போது எது நன்மை பயக்கும் என்பதை நாம்அறிந்து கொள்ளும் ஆற்றலில்லேம். இறைவன் ஒருவனே எமக்கு எது வேண்டுமென அறிந்து அருளவல்லவர். ஆயினும் எமக்கு வேண்டாத ஒன்றை எமது அறியாமை காரணமாக நாம் விரும்பித்தந்தருளும்படி இறைவனைக் கேட்டாலும் அதனை அவர் தந்தருளுவார். ஆகவேதான், 'நாம் இறைவனை வழிபடுவதே தவிர இன்னது தர வேண்டும்' எனக் கேட்டல் தகாது என்பர் அறிஞர். அதுவேநிஷ்காமிய வழிபாடு எனப்படுவது.

ஆகவே மாணவ மாணவியர் இவ்விழாககாலத்திலே மிகச்சிறப்பாக அகத்தையும் புறத்தையும் தூய்மைப் படுத்தி சத்தியநெறியினைக் கடைப்பிடிக்கவேண்டும்

நவராத்திரி வழிபாடு செய்யவிரும்பும்நாம் அதற்குரிய ஏற்பாடுகள் மாத்திரம் செய்துவிட்டு ஒருகணப் பொழுதாவது மன அமைதி கொண்டு அன்னை பராசக்தியைத் தியானிக்க மறப்போமாயின் ஏனைய முயற்சிகளினல் பயனில்லையாம். ஆகவே வழிபடுவதே சிறந்தகடமை எனக் கடைப்பிடிப்போம்.

### இன்றைய பலன்

4-10-67
புதன்கிழமை
(புரட்டாதிமாதம் 18வ)

நட்சத்திரம் - அத்தம் பிறபகல் 2-51 மேல் சித்திரை
திதி-பிரதமை பி. இரவு 12-35ன் மேல்
சுபநேரம்- 4-32 — 6-02 துதியை
ராகுகாலம்12-02-1-32

மேஷம் — கழுகுப் பார்வை, கவனித்துநட.
ரிஷபம்-பிதாவழி சுகம் பெரியோர் மதிப்பு.
மிதுனம் - தொழிலில் தொல்லை, துணைவர் சகாயம.
கடகம் - தேடி வரும் செல்வம், நாடி வரும் கீர்த்தி.
சிம்மம் - மந்தநிலை, மறதிக்குணம்.
கன்னி - தாழ்ந்துபோ, தலைமை கிடைக்கும்.
துலாம் - சொல்லும் வெல்லும், சுகமுண்டு.
விருச்சிகம் - குசுகுசுத்திட்டம், குலைந்து விடும் அமைதி.
தனுசு - சுற்றம்சூழும், சுபநாள்.
மகரம் - பந்தபாசம், பரவசத்தாண்டவம்.
கும்பம் - ஆயுதபயம், அவசரம் வேண்டாம்.
மீனம் - குற்றால அருவி போல் வற்றாத இன்பம்.
திருமலை வேலுப்பிள்ளை

# ஐயாறன் எழுதுகிறார்

பல்லாண்டுகள் இலங்கை வானொலியிலும் வெளியிலும் கலைப்பணி செய்த ஓர் அன்பர் வயோதிபமாகி, தம் பெரிய குடும்பத்துடன் ஜீவனத்துக்கு வழியில்லாமல், பிச்சை எடுத்துப் பிழைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ள ஒரு கண்ணராவியைப் பார்த்தேன். சகிக்க முடியவில்லை.

பிச்சை எடுத்துத்தான் ஒருவர் ஜீவனம் நடத்த வேண்டுமென்ற நிலை ஏற்படுமாயின், இந்த உலகத்தைச் சிருஷ்டிசெய்த கடவுளே ஒழியட்டும் என்ற கருத்துப்பட உணர்ச்சி வேகத்துடன் சபிக்கிறார் திருவள்ளுவப் பெருந்தகை.

மேற்குறித்த கலைஞர் உள்ளிட்டு இக்காலத்தில் எவ்வளவோ பேர் மானத்தை விட்டுப் பிச்சை எடுத்துப் பிழைக்க வேண்டிய நிலை உள்ளது. பிச்சை கேட்டாலும் கொடுப்பவர்கள் மிகவும் குறைவு. வள்ளுவப் பெருந்தகை இந்தக் கண்ணராவியைக் கண்டால் இன்னும் என்ன சொல்லி இருப்பாரோ!

கடவுள் வாழ்த்துப்பாடிய பரம ஆஸ்திகர் திருவள்ளுவர். அவர் இப்படியும சொன்னதின் நோக்கமென்ன? கடவுள் ஒழிய வேண்டுமென்ற? அல்ல அல்ல. நாட்டிலே யாரும் பிச்சைஎடுத்து இகழ்ச்சியான வாழ்க்கை நடத்த வேண்டிய அவல நிலை ஏற்படாவண்ணம் நாம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதையே இதன் மூலம் வற்புறுத்திச் சொல்லுகிறார்.

பிச்சை எடுத்துப் பிழைக்கவேண்டிய நிலையில் நம் சமூகத்தில் சிலர் இருப்பதால், ஆஸ்திகரெல்லாம் நாஸ்திகராகி கடவுள், கோவில் எல்லாம் அழிந்துவிட வேண்டுமென்று அவர் கூறிவிட்டதாகச் சொல்லி, அப்படிச் செய்வதாயின், அதைவிட விபரீதம் வேறு இருக்கமுடியுமா?

ஃ ஃ ஃ

இன்று நவராத்திரி ஆரம்பம். அடுத்த ஒன்பது நாட்களையும் கலைவிழாவாக இலங்கையில் பல பகுதிகளிலும் இந்துக்கள் கொண்டாடுகின்றனர்கள். கலைமகளுக்கு விழா எடுத்துக் கலைவிழா நடத்துவது நல்லதுதான். ஆனல் அதே சமயம் நமது கலைஞர்களில் சிலரும் பிழைக்க வழியின்றி தவிப்பதாயின் அது கலைமகளுக்கே மிக வேதனையளிக்கும். கலைஞர்களுக்குப் போதுமான ஆதரவும் மதிப்பும் தந்து போற்றுவதுதான் கலைமகளுக்கு உண்மையில் மகிழ்ச்சியளிக்கும். கலைஞர் யாவரும் கண்யமாக, நிம்மதியாக வாழும்படி நம் சமூகத்தார் செய்வதாயின் அதுவே கலைகளுக்குச்செய்யும் மேலான வழிபாடாகும்

இதே சமயம் கலைஞர்களுக்கும் ஒரு பொறுப்புண்டு. அவர்களில் சிலர் கூடாத சில பழக்கங்களுக்கு அடிமைப்பட்டுத் தங்கள் வாழ்க்கையையே குட்டிச்சுவராக்கிக்கொள்கின்றனர். கலைச் செல்வம் படைத்தவர்கள் தூய்மையான வாழ்க்கை வாழ்ந்தாலே கலை வளருவதுடன் அவர்கள் தங்களுக்குத் தாங்களே நன்மை செய்து கொண்டவர்களுமாவர் தங்களைஅடிமைப்படுத்தியுள்ள கூடாத பழக்கங்களிலிருந்து தங்களை விடுதலை செய்து தங்கள் வாழ்க்கையைத் தூய்மைப்படுத்த வேண்டுமென்று அவர்கள் கலைமகளை வேண்டி வழிபட்டால், அவர்களது கலைத் தெய்வம் அவர்களுக்குக்

(4-ம் கலம் பார்க்க)

[5-ம் கலத்தொடர்ச்சி]

கருணையுடன் துணைசெய்வது உறுதி. ஃ ஃ

தம்மையே புகழ்ந் திச்சை பேசினும் சார் கிலுந்தொண்டர் தருகிலாப், பொய்ம்மையாளரைப் பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள், இம்மையே தரும் சோறுங் கூறையும் ஏத்தலாம் இடர்கெடலுமாம். அம்மையேசிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

[புலவர்காள், பணம் கொடுப்பாரென்று எண்ணி பொய்மையாளரைப் போற்றிப் பாடாதீர்கள். புகலூரிலுள்ள இறைவனை ஏற்றிப் பாடுமின். பாடினல் உங்களுக்கு இவ்வுலகவாழ்விலேயே உணவு உடை முதலியன தாராளம் கிடைப்பதுடன் அம்மையிலும் நல்ல பதவி கிடைக்குமென்பதில்சந்தேகமில்லை.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘மனித குலத்தை அழிவிலிருந்து காக்க காந்தியின் அன்பு வழி பின்பற்றுவோம்’

## வன்முறையையும் வகுப்பு வாதத்தையும் கண்டித்து இந்திய ராஷ்டிரபதி உரை

புதுடில்லி, ஒக்.3

**நேற்று, காந்தி ஜெயந்தி, இந்தியாவெங்கும் கொண்டாடப்பட்டது. பல ராஜ்யங்களிலும், இக்கொண்டாட்டம், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாடு ஆகிய கொள்கைகளைப் பிரதிபலிப்பதாக அமைந்தது.**

மகாத்மாகாந்தியின் நூற்றுண்டு பிறந்ததினவிழாவின் ஆயத்தமாக நடைபெறும் ஒரு வாரக் கொண்டாட்டத்தை, இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயின் தொடக்கிவைத்துப் பேசுகையில், காந்தியின் போதனைகளை மக்கள் ஏற்று வாழ வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

உண்மையான அல்லது கற்பனையான அநீதிகளை எதிர்ப்பதில், வன்முறையை மக்கள் கடைப்பிடிக்கக் கூடாது என்றும், உட்பகையை அதன்மூலம் வளர்த்துக்கொள்ளக் கூடாதென்றும் டாக்டர் ஹுசெயின் மேலும் கேட்டுக்கொண்டார்.

### கட்டுப்பாடான ஜனநாயகம்

ஒழுங்கும், கட்டுப்பாடுமுள்ள ஜனநாயகம்தான் வெற்றியடையும் என்று காந்தி வலியுறுத்தியுள்ளதை ராஷ்டிரபதி நினைவூட்டினார். ஒழுங்கு, கட்டுப்பாடு இரண்டும் உள்ள ஜனநாயக அமைப்பின் மூலம் மக்கள் தமது விருப்பங்களைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்றார் அவர்.

நாட்டின் இளைஞர்களுக்கிடையே அதிருப்தியும், நிராசையும் வளர்ந்து வருவதை டாக்டர் ஹுசெயின் குறிப்பிட்டுப் பேசுகையில், நிராசையின் பலனாக வாலிபர்கள் சிற்சில சமயங்களில் பலாத்காரத்திலும் ஈடுபட்டுவருகிறார்கள் என்றார். இளைஞர்களின் உள்ளங்களைப் பக்குவமாக வளர்க்க வேண்டியதன் அவசியத்தை ராஷ்டிரபதி இக்கட்டத்தில் வலியுறுத்தினார்.

### வகுப்புவாதம்

வகுப்புவாத வெறியை, ராஷ்டிரபதி வன்மையாகக் கண்டித்தார். மதசார்பற்ற நாடான இந்தியாவில், சகல சமூகங்களும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கான சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த நாம் பாடுபடவேண்டும். பூரண சமூக, பொருளாதார வசதிகளை நாட்டில் உண்டாக்குவதற்கு, மக்களின் ஒன்றுபட்ட ஆக்கப்பணித்திட்டம் அவசியமென காந்தி கூறியிருப்பதை ராஷ்டிரபதி குறிப்பிட்டார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள தீவிர உணவுப்பற்றுக்குறை, விவசாயத்தை நாம் குறைவாக மதிப்பிட்டதால் ஏற்பட்ட விளைவே என்றார் டாக்டர் சாகிர் ஹுசெயின்.

### பாதாளத்தின் விளிம்பில்

சர்வதேச நிலைமை பற்றி ராஷ்டிரபதி குறிப்பிடுகையில், உலகம் பாதாள மொன்றின் விளிம்பில் நின்றுகொண்டிருப்பதாகவும், மனித குலமே அழிக்கப்படும் ஆபத்து நிலவுவதாகவும் கூறினார்.

இந்த ஆபத்திலிருந்துநாம் உலகை விடுவிப்பதானால், மகாத்மாவின் அகிம்சை வழியைப் பின்பற்றவேண்டும். அணுகுண்டுக் குப்பதில், அன்புவழிதான் இவ்வாறு ராஷ்டிரபதி கூறினார்.

### சென்னையில்

சென்னையில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில், அகில இந்திய காங்கிரஸ் அக்கிராசனர் திரு. காமராஜ் ஒவ்வொரு கிராமத்திலும், இளைஞர்கள் முன்வந்து, மகாத்மாகாந்தியின் போதனைகளைப்பரப்ப வேண்டும் என்றுகேட்டுக்கொண்டார். காந்தியின் போதனைகளைப் பரப்புவதில் மாதர்கள் அதிக பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்,

காந்திஜியின் லட்சியங்களைச் செயலாக்குவதில் மக்கள் உறுதிபூண வேண்டுமென்று தமிழக முதல் மந்திரி திரு. அண்ணுதுரை, நேற்று வானொலியில் ஒலிபரப்பிய உரையில் குறிப்பிட்டார். மகாத்மாகாந்தி, தேசியத்தின் சின்னம், மறு உருவம் என்றார் திரு. அண்ணுதுரை.

# மறைந்த இந்தியப் பிரதமர் லால் பகதூருக்கு அஞ்சலி

## ‘ஏழைகளின் நண்பன்’

புதுடில்லி, ஒக். 3

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியின் பிறந்த தினமாகிய நேற்று, அவருக்கு நாடெங்கும் மக்கள் அஞ்சலிசெலுத்தினர்.

‘திரு. சாஸ்திரி, ஏழை மக்களின் நண்பன். அவர் நாட்டுக்குச் செய்த தன்னலமற்ற சேவை, எங்கள் நினைவில் எப்போதும் நிற்கும்’ என்று இந்திய உள்துறை மந்திரி திரு. சவான், ஒரு நிகழ்ச்சியில் பங்கு பற்றிப் பேசுகையில் கூறினார்.

மறைந்த பிரதமரின் சமாதி இருக்கும் இடமான விஜயகாட்டுக்கு நேற்று ஏராளமான மக்கள் சென்று தமது அஞ்சலியைச் செலுத்தினர்.



அங்கு முதன் முதலாகச் சென்று அஞ்சலி செலுத்தியவர்களில் திருமதி லலிதா சாஸ்திரியும் ஒருவர்.

பிரிட்டிஷ்

# தொழிற் கட்சியின் ஒருவார மாநாடு ஆரம்பமாகியது

லண்டன், ஒக். 3

பிரிட்டனில் ஆளுங்கட்சியான தொழிற் கட்சியின் ஒரு வார மாநாடு, நேற்று ஆரம்பமாகியது.

கட்சியின் சாதாரண அங்கத்தவர்கள் பெரும்பாலோரும், அமெரிக்காவின் வியட்னும் கொள்கையிலிருந்து பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டுமென்று கருதுவதாகக் கூறப்படுகிறது.

### வியட்னும் கொள்கை கண்டனம்

வட வியட்னும் மீதான குண்டு வீச்சை அமெரிக்கா நிறுத்த வேண்டுமென்றும், வியட்னுமிலிருந்து சகல வெளிநாட்டுத் துருப்புகளும் வெளியேற வேண்டுமென்றும், இரண்டு வியட்னும்களும் இணைக்கப்பட வேண்டுமென்றும் இந்த அங்கத்தவர்களின் தீர்மானமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற் கட்சியின் உள்நாட்டுக் கொள்கை பற்றிய அங்கத்தவர்கள் கருத்து பிரதமர் வில்சனின் ஊதியக் குறைப்புக் கொள்கையில் அதிருப்தியையும், அவநம்பிக்கையையும் பிரதிபலிப்பதாக இருக்கிறது.

# இஸ்ரேலுடன் பேசுவதற்கு இசைய அரபுநாடுகள் மறுப்பு

நியூயோர்க், ஒக். 3

இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவற்கு அரபு நாடுகள் இசைய மாட்டாவென்று அந்நாடுகளின் பிரதிநிதிகள் ஐ. நா. பொதுச்சபையில் தெரிவித்துள்ளன.

அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் துருப்புகள் வெளியேறும் பிரச்னையை, இஸ்ரேலை அரபு நாடுகள் அங்கீகரிக்க வேண்டுமென்ற கோரிக்கையுடன் சிலர் இணைக்க முயல்வதை அரபு நாடுகளின் பிரதிநிதிகள் கண்டித்தனர்.

### ஜோர்தான் பிரதிநிதி

ஐ. நா. பொதுச்சபையில் ஜோர்தான் பிரதிநிதியும், அதன் வெளியுறவு மந்திரியுமான திரு. முகம்மது எல் அமீர், தனது நாட்டின் கொள்கை சமாதானத்தை அடிப்படையாகக் கொண்டது என்றார்.

இஸ்ரேலை, அது பிடித்துள்ள அரபுப் பிராந்தியங்களிலிருந்து வெளியேறச் செய்யுமாறு அவர் ஐ. நா. சபையைக் கேட்டுக்கொண்டார். இல்லையேல், மேற்கு ஆசியாவில் மீண்டும் ஒரு கொந்தளிப்பு ஏற்படும் என அவர் சபையை எச்சரித்தார்.

### ஈரான்

ஈரான் வெளியுறவு மந்திரி திரு. சாகித்தி பேசுகையில், இஸ்ரேல் அரபுப் பிராந்தியங்களிலிருந்து வெளியேறுவதையும், இஸ்ரேலை அரபு நாடுகள் அங்கீகரிப்பதையும் சில நாடுகள் இணைக்க முயற்சிப்பதைக் கண்டித்தார். இந்த முயற்சியில் ஈடுபடும் நாடுகளின் பெயர்களை அவர் குறிப்பிடவில்லை.

### பல்கேரியா

பல்கேரிய வெளியுறவு மந்திரி திரு. பாஷாவ் இஸ்ரேலின் போக்கைக்கண்டித்துப் பேசினார்.

# ரஷ்ய எல்லையில் துருக்கி அணுக்கண்ணி வெடிகள்

வாஷிங்டன், ஒக், 3

துருக்கி, தனது ரஷ்ய எல்லையில் அணுக்கண்ணி வெடிகள் வைக்கத் தீர்மானித்திருப்பதை ‘ஒரு ஆத்திரமூட்டும் நடவடிக்கை’யாகக் கருத முடியாதென அமெரிக்க ராஜாங்க பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா இங்கு தெரிவித்துள்ளார்.

துருக்கிக்குச் சென்று, அங்கு வட அத்லாந்திக் ஒப்பந்த நாடுகளின் தற்பாது காப்பு பற்றிய உயர்நிலை ஆலோசனைகள் நடத்திவிட்டு வாஷிங்டன் திரும்பியுள்ள திரு. மக்னமாரா, துருக்கியின் தீர்மானம் தற்காப்பு நடவடிக்கையாகவே கருதப்பட வேண்டிய தொன்றாகும் என்பதை வலியுறுத்தினார்.

# முன்னாள் கிரேக்க பிரதமர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்

அதென்ஸ், ஒக். 3

முன்னாள் கிரேக்கப் பிரதமர் திரு. கானிலொவ்லை, அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அதிகாரத்துக்கு வந்த தற்போதைய இராணுவ ஆட்சி, வீட்டுக்காவலில் வைத்துள்ளது.

அவரது இல்லத்துக்கு யாரும் வரவோ அல்லது அங்கிருந்து யாரும்வெளியே செல்லவோ அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவரது டெலிபோன் தொடர்பும் அறுக்கப்பட்டுள்ளது.

சென்ற வாரம் கிரேக்க இராணுவ ஆட்சியைக் கண்டித்து திரு. கானிலொவ் பேசியிருந்தார். கிரீசில் மீண்டும் அரசியல் சுதந்திரத்தை நிறுவுமாறு அவர் ஆட்சியினரைக் கேட்டிருந்தார்.

### கான்டனில் இராணுவ எதிர்ப்புத் திட்டம்

மாஸ்கோ ஒக். 3

சீனுவின் தேசிய தினத்தன்று, கான்டனில் மா சே துங் எதிர்ப்பாளர், சீன இராணுவத்தினருக்கெதிராக ஒருஎதிர்ப்புத் திட்டத்தைத் தயாரித்திருந்ததாகவும், ஆனல், மா ஆதரவாளர் அதை முறியடித்துவிட்டதாகவும், சீனமொழியில் ஒலிபரப்பப்பட்டசெய்தியொன்றில் மாஸ்கோ ரேடியோ அறிவித்துள்ளது.

# சிக்கிம் எல்லையில் இப்போது அமைதி

புதுடில்லி, ஒக். 3

சிக்கிம் — திபேத் எல்லையில், இப்போதுஅமைதி நிலவுகிறது.

கடந்த ஞாயிறன்று, இந்தியத் துருப்புகள் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் எல்லையில் ஈடுபட்டதாகச் சீனு, பீகிங்கிலுள்ள இந்திய தூதரகப் பொறுப்பதிகாரிகளிடம் ஆட்சேபக்குறிப் பொன்றைச் சமர்ப்பித்துள்ளது.

சீனுவின் வழக்கமான ‘புழுகி மறைக்கும் தந்திரமே இது’ என அந்த ஆட்சேபக் குறிப்பை [illegible] இந்திய அதிகாரிகள் தள்ளி விட்டனர்.

தெ. வியட்னும்

# தேர்தல் செல்லுபடியாகும் என்கிறது சட்ட சபை

## சபாநாயகர் ராஜினுமாவும் மாணவர் ஆர்ப்பாட்டமும்

சைகோன். ஒக். 3

அண்மையில் தென்வியட்னுமில் நடைபெற்று முடிந்த தேர்தல் செல்லுபடியாகும் என்று தென்வியட்னும் தேசிய சட்டசபை நேற்றுத் தீர்ப்புக் கூறியுள்ளது.

முன்னதாக, சட்ட சபையின் உபகுழுவொன்று, தேர்தல் செல்லுபடியாகாது என்று தீர்ப்புக் கூறியிருந்தது, உபகுழுவின் அறிக்கையை விவாதித்த தேசிய சட்டசபை, உபகுழுவின் தீர்ப்பைநிராகரித்தது.

### சபாநாயகர் ராஜினுமா

சட்டசபையில் மொத்தம் 117 அங்கத்தவர்கள் இருக்கின்றனர். தேர்தல் செல்லுபடியாகும் என்ற தீர்மானத்துக்குச் சாதகமாக 58 பேரும், எதிர்த்து 43பேரும் வாக்களித்தனர். ஒன்று, வெற்று வாக்கு. நான்கு வாக்குகள் செல்லுபடியாகாதவை.

சட்டசபையின் தீர்ப்பை ஆட்சேபித்து, சபையின் சபாநாயகர் ராஜினுமாச் செய்தார்.

### மாணவர் ஆர்ப்பாட்டம்

தேர்தல் செல்லுபடியாகாது என்றுதீர்ப்பளித்த உபகுழுவின் அறிக்கையைச் சட்டசபை விவாதித்துக் கொண்டிருக்கையில், சபைக் கட்டிடத்துக்கு வெளியே மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடாத்தினர். அவர்களைக் கலைக்கப் பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். இருபது மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "தமிழ் பாடசாலைகளை புதிய கல்வித்திட்டம் பாதியாது"

உரும்பராய், செவ். 'மாணவர் கல்வியை வளர்க்க அரசாங்கம் புதிய கல்வித்திட்டத்தை வகுத்து வருகிறது. தமிழ்ப் பாடசாலைகளின் கல்வி புதிய கல்வித்திட்டம் மூலம் புறக்கணிக்கப்படும் என்று யாரும் பயப்படவேண்டியதில்லை. பெரிய பாடசாலைகளுக்கு சங்கீதம், உடற்பயிற்சி போன்றவற்றில் தகுதி பெற்ற ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் நடைபெற்ற கோப்பாய் வட்டாரத் தமிழ் பாடசாலைகளுக்கான சங்கீத விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடபகுதி கல்வி மாஅதிகாரி திரு. சி. ஏ. ஞானசேகரம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கோப்பாய் வட்டார வித்தியாதிகாரியாக இருந்து ஓய்வுபெற்ற திரு. ஆ. சிவகுரு விழாவுக்குத் தலைமை வகித்தார்.

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை மாணவிகளின் தமிழ்த் தாய் வணக்கத்துடன் ஆரம்பமான இவ்விழாவில், வலிகாமம் கிழக்குத் தமிழாசிரியர் சங்கச் செயலாளர் திரு. அ. பஞ்சாட்சரம் வரவேற்புரை நிகழ்த்தினர். கோப்பாய் வட்டாரத்தில் 55 பாடசாலைகள் இருப்பதாகவும், இப்பாடசாலைகளின் தேவைகளை அரசாங்கம் பூர்த்திசெய்யவில்லையென்றும், வலி கிழக்குப் பகுதியில் பண்டு தொட்டு வறிய மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வியூட்டிவந்த 10-க்கு மேற்பட்ட சிரேஷ்ட தமிழ்ப் பாடசாலைகள் இருப்பதாயும் பாடசாலைப் புனரமைப்பின் போது இப்பாடசாலைகள் தரம் உயர்த்தப்படாதுவிடினும் தரம் குறைக்கப்படாது இருந்தபடியேனும் தொடர்ந்து இயங்குவதற்கு அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டுமென்றும் உரும்பராயில் ஒரு மகளிர் கல்லூரி மிகவும் அவசியமென்ற உரும்பராய்ப் பெற்றோர்களின் ஆசை வீண் போகக்கூடாது என்றும் திரு. பஞ்சாட்சரம் தமது உரையில் கேட்டுக்கொண்டார்.

பிரதம மத்தியஸ்தராகக் கலந்துகொண்ட இசைப்புலவர் திரு. என். சண்முகரத்தினம், விழாக் குழுச் செயலாளர் திரு. எஸ் வி. வேலுப்பிள்ளை ஆகியோரும் பேசினர். திருமதி சி. ஏ. ஞானசேகரம் பரிசில்களை வழங்கினர்.

# 'கல்வித்துறையில் தமிழரை பின்பற்றுங்கள்'

## காலியில் இரியகொல்லை

காலி, செவ்வாய் "சிங்களப்பகுதிகளில்விஞ்ஞானம் படிப்பிப்பதற்கு போதிய விஞ்ஞான ஆசிரியர்கள் இல்லை. ஆகையால் தற்பொழுது விஞ்ஞானக் கல்வி புகட்டுவதற்கு 179 ஆசிரியர்கள் வேண்டியிருக்கிறது. தமிழர்கள் இந்த நாட்டில் சகோதரர்கள் போல் வாழ்ந்துவருகின்றனர். விஞ்ஞானக்கல்வியில் அவர்கள் சிங்களவர்களையும் முந்திவிட்டார்கள்." இவ்வாறு கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை காலி சவுத்லென்ட்ஸ் கல்லூரி வருடாந்த பரிசளிப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது:

"பொறியியல் பகுதியில் 60 விகிதமும் விஞ்ஞானப் பகுதியில் 50 விகிதமும் தமிழர் சித்தியடைந்துள்ளனர். ஆகையால் நாங்கள் எங்களுடைய பிள்ளைகளுக்கு விஞ்ஞானக்கல்வி கற்பிப்பதற்கு வேண்டிய வசதிகளை ஒழுங்கு செய்யவேண்டும். அத்துடன் விஞ்ஞானத்துறையில் தமிழர்களையும் முந்தக்கூடியவகையில் சிங்கள மாணவர்கள் விஞ்ஞானக் கல்வி கற்க முன்வரவேண்டும்."

கல்லூரி அதிபர் திருமதி ரூபா நாணயக்காரா வருடாந்த அறிக்கையில் ஆங்கிலத்தின் அத்தியாவசியத்தையும் சர்வகலாசாலை மாணவர்களுக்கு ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்படவேண்டுமென்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

திருமதி இராணி இரியகொல்லை பரிசில்களை வழங்கினர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 4·10·67

[செய்திகள்:-காலை 7-00. பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள் 8-00 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 சங்கீதபாடம் 6-30 விவாத மேடை, 6-45 கிராமசஞ்சிகை 7-15 பவளம், 7-30 விவேகச்சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-30 செய்திச் சுருள், 9-45 நாதசுரம்.

## தொலைபேசி தொடர்பு சீராகும்

குரும்பசிட்டி, செவ்வாய் பருத்தித்துறை, பளை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் நிறுவப்படவுள்ள தன்னியக்க தொலைபேசி இணைப்பு நிலையங்கள் சுமார் 3 மாத காலத்திற்குள் அமைக்கப்பட்டுவிடும் என தபால் தந்தி இலாகா அறிவித்துள்ளது. இதன் பின்னர் யாழ். மாவட்டத்தில் தொலைபேசிச் சேவை நவீன வசதிகளுடன் இடம் பெறுவதுடன் காலதாமதமும் வெகுவாகக்குறையும்எனவும்எதிர்பார்க்கப்படுகிறது. ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை காரைநகர், பருத்தித்துறை, பரந்தன், கிளிநொச்சி போன்ற ஆறு இடங்களில் புதிய தபாற் கந்தோர்களும் நிறுவப்படவுள்ளன.

## செபமாலை மாதா உற்சவம்

நாரந்தனை, செவ்வாய் சரவணையில் அமைந்துள்ள செபமாலை மாதாவின் வருடாந்த 2வது உற்சவம் இம்மாதம் 7 ந்திகதி நடைபெறவிருக்கிறது.

## சபாநாயகருக்கு அஞ்சலி

சங்கானை, திங்கள் சங்கானை பட்டினசபையின் மாதந்தரக் கூட்டம் சபைத்தலைவர் திரு. எஸ். கே திருச்சிற்றம்பலம் தலைமையில் ஆரம்பமானபோது காலஞ்சென்ற சபாநாயகர் சேர. அல்பர்ட் பீரிசிற்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.





லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், மேற்கு ஐரோப்பாவின் மிகப்பெரிய அதி பிரசித்த பால் தயாரிப்புத் தொழிற்சாலையிலிருந்து வருகிறது; ஹாலந்தின் அதிகபட்ச அபிமானம் மிகுந்த இதில் 28 சத விகிதம் பாற்கொழுப்பும் 26.7 சத விகிதம் புரதச் சத்தும் உண்டு.

லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், உண்மையான முதற்றர பூரண ஆடைப்பால் தர வேண்டிய அனைத்தையும் தருகிறது; இருந்தும், வேறெந்த ரகப் பவுடரையும் விடக் குறைவான நியாய விலையில் உங்களுக்குக் கிடைக்கிறது.

ஏக விநியோகஸ்தர்கள்

மில்லர்ஸ்

லிமிட்டெட்.

விளம்பரம்

பேன் நிவாரணி

LICE DESTROYER

1. பேன் தொல்லையால் உபவாதைப்படும் பெண்மணிகளுக்கும் சிறுபிள்ளைகளுக்கும் நிவாரணம் அளிக்க டாக்டர் வை. சுப்பிரமணியத்தின் பேன் நிவாரணியைபாவியுங்கள். மருத்துவ ஆலோசனைப்படி விஷேசமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இம்மருந்து பாவனையாளருக்கு எவ்வித கெடுதலும் இன்றி 12 மணித்தியாலத்திற்குள் பேன்களைக்கொன்று கடியினின்று நிவாரணம் அளிக்கக்கூடியது.

பாவிக்கும் முறை: தலைமயிரை நன்ருகக் கழுவியபின்னர் இந்த என்வலப்பிற்குள் இருக்கும் நான்கு சீலைத்துண்டுகளையும் தலைமயிருக்குள் நாலு இடத்தில் வேருக வைத்து கட்டியபின்னர் வெள்ளைப்படுக்கையில் படுத்து வழக்கம்போல் நித்திரை செய்யவும்.

காலையில் பேன்கள் செத்துவிடும். பின்னர் சீயாக்காய் அரைத்து முழுகி விடவும்.

விலை ரூபா ஒன்றுதான்.

2. மனேன்மணி கிரந்தி எண்ணை: 300 வருடங்களாக பிரசித்தியுடன், புகழ்பெற்றுவரும் கிரந்தி எண்ணை பிறந்தநாள் முதல் சிறு குழந்தைகளுக்கு ஆறுவயதுவரை பாவிக்கக்கூடியது.

3. இப்பொழுது நாடுபூராவும், விற்பனைசெய்யப்பட்டுவரும், இவ் இருமருந்துகளையும் யாழ்ப்பாணக்குடாநாட்டில் விற்பனை செய்வதற்கு இரு பெண் விற்பனையாளர்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் டாக்டர் V. சுப்பிரமணியம், ஆயுள்வேத வைத்தியசாலை, கல்வியங்காடு என்ற விலாசத்திற்கு நேரில் விண்ணப்பிக்கவும்.

4. சகல விஷவைத்தியங்களும், கட்டு, கண்டமாலை, வைத்தியங்களும் செய்யப்படும்.

5. கல்வியங்காடு ஆயுர்வேத வைத்தியசாலையிலும், சகல மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

"சூரியன் மார்க்"

வாசனை சந்தனப் பவுடர்

சந்தன வில்லைகள்

கோவில் தேவைகளுக்கும் திருமணம்முதலிய வைபவங்களுக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:

சுந்தரம் பிறதர்ஸ்

73, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

மனேஜர்

யாழ்ப்பாடி ஐக்கிய பண்டசாலைக்கு ஒரு மனேஜர் தேவை S. S. C. சித்தி, கூட்டுறவுப் பாடசாலைப் பயிற்சி, ரூபா 1000/-ரொக்கப் பிணை தேவை. வயது 20-க்கு மேலும் 35-க்குள்ளும் விற்பனையாளனை அவரே கொண்டுவருதல் வேண்டும். மனுதாரரின் சொந்தக் கையெழுத்தில் மனுக்கள் 10-10-67-க்கு முன் கிடைக்கப்பெறுதல் வேண்டும். து. சீனிவாசகம், கௌரவ காரியதரிசி. 71, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 2212

### கல்வி

வகுப்புகள்

B. A. G. A. Q, G. C. E. (A. L.) ஆகிய வகுப்புக்கள் 11-10-67-ல் ஆரம்பமாகின்றன. புவியியல், வரலாறு, தமிழ், அரசியல், சமஸ்கிருதம், பொருளாதாரம், தூய கணிதம், பிரயோக கணிதம் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. யாழ்ப்பாணக் கல்வி நிலையம், (JAFFNA EDUCATION CENTRE), 304/3, ஆசுப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2213

### விற்பனைக்கு

நாய்க்குட்டிகள்

நல்ல சாதி ஆண், பெண் அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. போயாவுக்கு முன்தினம் அல்லது போயாதினத்தில் எம்.பஞ்சலிங்கம், சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை வடக்கு என்ற விலாசத்தில் பார்வையிடலாம் 2552

பாடப்புத்தகங்கள்!

ஸ்ரீ காந்தா அச்சக வெளியீடு: தமிழ் இலக்கிய வினுவிடை G. C. E. வகுப்பு 1967 [1] ''அ'' பாடத்திட்டத்திற்குரிய உரைநடைத் தொகுப்பும் செய்யுள் தொகுப்பும். [2] மந்தரை சூழ்ச்சிப்படலம் கைகேயி சூழ்வினைப்படலம் [3] பாரதச் சுருக்கம். இவைகளிலிருந்து தெரிந்தெடுத்த 12மாதிரி வினுப்பத்திரங்களும் விடைகளும் சந்தர்ப்பம் கூறும் பகுதிகளும் சேர்ந்து விலை 2 ரூபா. ஸ்ரீ காந்தா அச்சகம், புத்தகசாலை, 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2393


வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

# குதிரை மார்க் வாளிகள்



**குதிரை மார்க் கல்வனைஸ்ட் வாளிகளை வாங்கி உபயோகிக்கிறீர்களா?**
**இன்றே வாங்குங்கள்**

குதிரை மார்க் வாளிகள் தரத்தில் உயர்ந்த இரும்புத் தகடுகளினுல் செய்யப்பட்டவை. எங்கள் தொழிற்சாலையில் மட்டும் கல்வெக்ஸ் முறைப்படி விசேஷமாகத் தயாரிக்கப்படுவன. உங்களுக்கு வேண்டிய எல்லாவித அளவுகளிலும் கிடைக்கும்




தயாரிப்பாளர்கள்:-

தலைமைக்காரியாலயம்:- எல்பிஹெம்ஹவுஸ்
கொழும்பு.

தொழிற்சாலை:- எல்பிஹெம் ஹவுஸ்
மாவிட்டபுரம்.

வடமாகாண விநியோகஸ்தர்கள்:-
தனலக்ஷுமி ஸ்ரோர்ஸ்
தெல்லிப்பழை.

கையிருப்பாளர்கள்:-
1. மஸ்கன்ஸ் லிமிட்டெட், கொழும்பு - 12.
2. என். வைத்திலிங்கம் அன் கோ. 3-ம் குறுக்குத்தெரு, கொழும்பு.

யாழ். மாவட்ட

## சனசமூக நிலையங்களின் விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சனசமூக நிலையங்களின் விளையாட்டுச் சங்கம் யாழ். விளையாட்டரங்கில் நடாத்திய முதலாவது வருடாந்த விளையாட்டு போட்டியில் ஆண்கள் கீழ்ப் பிரிவில் நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலையத்தைச்சேர்ந்த ஏ.மரியதாஸ், மத்திய பிரிவில் கொக்குவில் மஞ்ஞேன்மணி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த விஜயராசா, மேற் பிரிவில் சென். மேரிஸ் சனசமூக நிலையத்தைச்சேர்ந்த என். அருள்ராசா, ஏ. அல்பிரட், அதிமேற்பிரிவில் அரியாலை சனசமூகநிலையத்தைச் சேர்ந்த எஸ். தியாகராசா, கீழ்ப்பிரிவு பெண்கள் போட்டியில் ரி. கிருஷ்ணவேணி ஆகியோர் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

மற்றும் நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தைச் சேர்ந்த எஸ். ஏ. சில்வஸ்ரர், ஜி. எஸ். அலோசியஸ், டி. டி. ஜோர்ஜ், எல்.யேசுதாசன் ஆகியோர் மேற்பிரிவு அஞ்சல் ஓட்டத்தின் மூலமும், ஓட்டம் சம்பந்தமானபோட்டிகளிலும் வெற்றியீட்டிய சோமசுந்தரம் கோமதியும், சி. அழகரத்தினமும் ரசிகர்களின் பாராட்டுகளுக்கு இலக்கானுர்கள்.

ஏனைய போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:-

ஆண்கள் 100 யார் ஓட்டம் கீழ்ப்பிரிவு: ஏ. மரியதாஸ், என். மரியதாஸ், எஸ். கனகசபை. மத்திய பிரிவு: பி. விஜயராசா, எஸ். ஜெயரத்தினம், இ. அழகரத்தினம், மேற்பிரிவு: எம். அமலதாசன், கே.இராசேந்திரா, பி. அலோசியஸ். அதிமேற்பிரிவு: கே. பத்மசுந்தரம், எஸ்.இராசையா, என்.பத்மநாதன்.மேற்பிரிவு பெண்கள்! எஸ். உத்தமராணி, கே.நகுலேஸ்வரி, கே. கனகேஸ்வரி. கீழ்ப்பிரிவு: ரி. கிருஷ்ணவேணு, எஸ்.ஜெகதீஸ்வரி, சோமசுந்தரம் கோமதி.

நீளம்பாய்தல் மேற்பிரிவு: என். அல்பிறட், எஸ்.கணேசலிங்கய், எம். செபஸ்தியாம்பிள்ளை. கீழ்ப்பிரிவு: ஏ. மரியதாஸ், எஸ். முத்துத்தம்பி, என். மரியதாஸ். மத்தியபிரிவு: பி. விஜயராசா, எஸ். பிரான்சிஸ், ஐ. ஞானேஸ்வரன்.

உயரம்பாய்தல் மத்திய பிரிவு: கே. கந்தசாமி, என். இராசகுலசிங்கம், ஈ. ஏ. ஞேமன்ஸ், மேற்பிரிவு: வி. விவேகானந்தன், கே. திருஞானசெல்வன், எஸ்.குமாரசாமி. கீழ்ப்பிரிவு: கே.சூரியகுமார், ஜே.பிரான்சிஸ், அன்ரன், அலோசியஸ். அதிமேற்பிரிவு: ஏ.சில்வஸ்ரர், ஏ.கனகசபை, ஏ. செல்வசிங்கம்.

நீளம்பாய்தல் அதிமேற்பிரிவு: எஸ். தியாகராசா, கே. கதிரேசு, எம். சிவசுப்பிரமணியம்.

பெண்கள் நிதான ஓட்டம் கீழ்ப்பிரிவு: ஜே.ரி. கிருஷ்ணவேணி, பி. சந்திரகுமாரி. வேஜினி. மேற்பிரிவு: ஜி. நகுலேஸ்வரி, கே. கனகேஸ்வரி. கயிறடித்தல் கீழ்ப்பிரிவு: ஜே. கே. யோகேஸ்வரி, ரி. கிருஷ்ணவேணி, பி. சந்திரகுமாரி. மேற்பிரிவு: எஸ். உத்தமராணி, கே. நகுலேஸ்வரி, கே. கனகேஸ்வரி.

ஆண்கள் தொங்கிப்பாய்தல அதிமேற்பிரிவு: எஸ். தியாகராசா, எஸ். ஜே. வினஸ்லோ, எஸ். தட்சணுமூர்த்தி. மேற்பிரிவு: ஏ. அருள்ராசா, என். அல்பிறட், பி. குமரகுரு. குண்டெறிதல் மேற்பிரிவு: எஸ். விஸ்வலிங்ாம். கே. தவஞானம், எம். அருள்நாதர். அதிமேற்பிரிவு: எம். தெய்வேந்திரா, எஸ். அருளம்பலம், எஸ்.ஜே.வின்ஸ்லோ, தடியூன்றிப்பாய்தல் பொது: ஏ. ஜெயரத்தினு, ஏ.சில்வஸ்ரர், கே. கதிரேசு. 1500யார் ஓட்டம்பொது: ரி.கிறேக்கறி எஸ். மகேந்திரன், என். கதிர்காமநாதன்.

100யார்கயிறடித்தல்ஆண்கள் கீழ்ப்பிரிவு: என், மரியதாஸ். எம். மகேந்திரன், எஸ். வின்ஸ்லோ. 200 யார் அதிமேற்பிரிவு: கே.பத்மசுந்தரம், எஸ். இராசையா, எம். ஜோர்ஜ். மேற்பிரிவு: என். வாமதேவன், ஏ.அருள்ராசா, எம். செபஸ்தியாம்பிள்ளை. மத்தியபிரிவு: பி. விஜயராசா, ஐ. தேவராசா, ஆர். அழகரத்தினம் பெண்கள் மேற்பிரிவு: எஸ். உத்த

[6- ம் பக்கம் பார்க்க

## நவராத்திரி பூஜைக்கு

தேவையான

- விளக்குகூடம்
- அபிஷேக திரவியங்கள்
- அபிஷேகச் சந்தனம் [உடன் யந்திரத்தினுல் அரைக்கப்பட்டது]
- அபிஷேகக் குங்குமம்
- அபிஷேக விபூதி
- அபிஷேக வாசனைதிகள்
- கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்திகள்
- நைவேத்தியப் பொருட்கள்

மற்றும்

**சகல சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.**

கடந்த 34 ஆண்டுகளாக நற்சேவை புரிந்து நற்பெயர் பெற்றவர்கள்.

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். றேட். ''பாலேந்திரா பில்டிங்'' யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068

## விளம்பரம்



யாழ்ப்பாணம் பட்டினம் வீரமாகாளி அம்மன் கோவிற்கு அருகே அம்மன்வீதியில் சில கட்டிடக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

தவணைமுறையில் பணம் செலுத்த வசதிசெய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது யாழ்ப்பாணம் பட்டினம் ஆனைப்பந்தி, உப-தபால் கந்தோருக்கு அருகே சில கட்டிடக்காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு.

விபரங்கட்கு:

H. P. T.
64, கெய்சர் வீதி,
கொழும்பு.
அல்லது
யாழ்ப்பாணம் பிரதிநிதி
த. வடிவநாதன்
''பூகண்ஸ்''
71, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

காணிகள் வாங்குவதற்கும் விற்பதற்கும் எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கவும். H. P. T. 64, கெய்சர் வீதி, கொழும்பு. அல்லது யாழ்ப்பாணம் பிரதிநிதி த.வடிவநாதன், பூகண்ஸ், 71, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 264

**கிளிநொச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
றெட்டிக்கோ வீதி,
பரந்தன்

## கேள்விவிளம்பரம்

1967-ம் ஆண்டு ஐப்பசி மீ 10-ம் திகதி மு. ப. 11 மணி வரைக்கும் மேற்படி சங்க கௌரவ காரியதரிசியால் இரண்டு லட்சத்துக்குக்குறையாமல்பதிவுசெய்ததும், முன் அனுபவமுள்ளதுமான ஒப்பந்தக்காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் கறடிப்போக்கு, கண்டி வீதியில் ஓர் உபஸ்ரோர் கட்டுவதற்கு அழைக்கப்படுகின்றன.

கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் கேள்விப் பிணைப்பணம் ரூபா 50/-, பத்திரப்பணம் ரூபர் 5/- செலுத்தியதன் பேரில் 8-10-67 பி. ப. 2 மணி வரை வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் கேள்விகள் அனுப்பப்படவேண்டும். ஏனைய விபரங்கள் கிளிநொச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

எம் சின்னத்துரை
275 காரியதரிசி.

## ''ஈழத்தவர்க்கும் வழிகாட்டினுர்''

உடுப்பிட்டி, செவ்வாய்

''நீதிபதியாக இருந்த சம்பந்த முதலியாரவர்கள் சமுதாயத்தின் எவ்வித பழிச்சொல்லுக்கும் அஞ்சாது தமிழ் நாடக வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டு தன்னையே அர்ப்பணம் செய்தார். தமிழ் நாடகத்துறையில் ஈழத்தவர்களுக்கும் வழி காட்டியாக விளங்கிச் சிறந்த கலைஞர்களை உருவாக்கினுர்.'' என்று கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயத்தில், கரவை வள்ளுவர் மன்றத்தினரால் நடாத்தப்பட்ட தமிழ்நாடகத்தின் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் நினைவு விழாக்கருத்தரங்கில் பேசுகையில் நாடகக் கவிமணி திரு எம்.வீ.கிருஷ் ணழ்வார் கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருடர் கைவரிசை

சங்கானை, செவ்வாய்

கடந்த சில தினங்களாக துணவியில் திருடர்கள் கைவரிசை காட்டி வருகின்றனர். இதன் விளைவாக இரு வீடுகளில் தங்க நகைகள் உட்பட குடம், குத்துவிளக்கு, துணிகள் ஆகியனவும், இன்னொரிடத்தில் சைக்கிள் ஒன்றும் களவாடப் பட்டுள்ளன.

சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டர் டயஸ் விசாரணை நடத்தினார். இனந் தெரியாத கோஷ்டி ஒன்று ஈடுபட்டுள்ளதாக அறியப்படுகிறது. இக் கோஷ்டியினரைக் கைது செய்வதில் அவ்வூர் பொதுமக்களுடன் இரவு பகலாகப் பொலிசார் தீவிர முயற்சி எடுத்து வருகிறார்கள்.

## டில்லி செல்கிறார்

உடுப்பிட்டி, செவ்.

புதுடில்லியில்நடைபெறும் சர்வதேச பஹாய்இயக்கமாநாட்டில் இலங்கையின்பிரதிநிதியாக கலந்துகொள்வதற்காக நெல்லியடியைச் சேர்ந்த திரு. கே. பேரம்பலம் நாளை விமானமூலம் பயணமாகிறார்.

## சிரமதானமூலம் விளையாட்டுமைதானம்

குரும்பசிட்டி, செவ்வாய்

ஏழாலை கிராம சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள பத்துப்பரப்பு நிலத்தில் பொது விளையாட்டு மைதானம் ஒன்றினை அமைப்பதில் புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். சிரமதான அடிப்படையில் இவ்வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## தரம் குறைப்பதற்கு ஆட்சேபம்

மாதகல், செவ்வாய்

மாதகல் சில்லாலை, மாரீசன்கூடல், இளவாலை, விளான், முள்ளானை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு கல்விபெற வாய்ப்பளித்து வரும் மாதகல் சஞ் சூசையப்பர் கல்லூரியை 7ம் வகுப்பு மட்டும் உடைய கனிஷ்ட கல்லூரியாகத் தரம்குறைப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

அமைந்துள்ளதாகவும் காணப்படுகிறது. தற்பொழுது கடல்மட்ட உயரத்திலிருக்கும் இப்பாலம் மழைக் காலங்களில் கடல் மட்டத்தின்கீழ் அமிழ்ந்துவிடுமெனவும் அஞ்சப்படுகிறது? இவ்விருபாலங்களிலும் வத்தைகள் அணைக்க முடியாமலும் அமைந்துள்ளதாகவும் வத்தைத்தொழிலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளதுடன் இவ்விருபாலங்களும்சரியான முறையில் அமைக்கப்படாததால் முன்புபோல் விரைவாக வேலைசெய்வதற்குஇவ் விருபாலங்களும் இடைஞ்சலாக அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதுறைமுகங்களில் ஒன்று பூர்த்தியாகிவிட்டது. மற்றஒன்றின் வேலை நடைபெற்று வருகிறது.

இதற்கான வேலைகளைப் பொறுப்பேற்று நடாத்தும் அரசாங்க பொறியியலாளர் கூட்டுஸ்தாபனத்தார் இரவும் பகலும் வேலைசெய்து வருகின்றனர்.


2-வது ஜனத்திரள் வாரம்!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை]

தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிஷ்ணா [திருமலை]

தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு

ராஜ் [நீர்கொழும்பு]

மற்றும் 4 திரைகளில்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி ஜனாதிபதியின் பரிசு பெற்று அநேகரின் பாராட்டையும் பெற்ற உணர்ச்சியூட்டும் சித்திரம்!

ஜெய்சங்கர் - நாகேஷ் - சுந்தரராஜன்
ஜமுனா - ஷோபா - ஜி. வரலக்ஷ்மி
பேபி பத்மினி இருவேடங்களில் நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

குழந்தையும் தெய்வமும்

டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
இசை: எம். எஸ். விஸ்வநாதன்




அமெரிக்கா

## குண்டுவீச்சை நிறுத்த வேண்டும் —கொஸிஜின்

மாஸ்கோ, ஒக். 3

வியட்னாமில் சமாதானம் காண்பதற்கான ஒரேவழி வடவியட்னாம்மீதான குண்டு வீச்சை அமெரிக்கா நிறுத்துவதும், வியட்காங்கியரின் தேசிய விடுதலை முன்னணியை அங்கீகரிப்பதுமேயாகும் என்று ரஷ்யப்பிரதமர் திரு. கொஸிஜின் கூறியுள்ளார்.

## ஜே. ஆர். நம்பிக்கை

கொழும்பு, செவ்வாய்

இலங்கையுடன் செய்து கொண்ட அரிசி ஒப்பந்தத்தைப் பர்மா கௌரவிக்கும் என நேற்று இலங்கை திரும்பிய ராஜாங்க மந்திரி தெரிவித்துள்ளார்.

பாங்கொக்கில் நடைபெற்ற மகாநாடொன்றில் கலந்துகொண்டு விட்டு நேற்று திரு. ஜெயவர்த்தன இலங்கை திரும்பினார்.

ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் பர்மாவு, தாய்லாந்தும் 85 வீகித அரிசியை அனுப்ப இணங்கியுள்ளதாகவும் தற்பொழுது செய்த குறைந்த அறுவடையின் காரணமாக இந்த முடிவு செய்யப்பட்டதென்றும் திரு. ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

## ஜப்பானுக்கு ஏவுகருவி

டோக்கியோ. ஒக். 3

பூமியிலிருந்து வானுக்குச் செல்லும் அமெரிக்க ஏவுகருவி ஒன்றை ஜப்பானில் உருவாக்குவதுபற்றி டோக்கியோவில்அமெரிக்க, ஜப்பானிய, பிரதிநிதிகள் கூடிப் பேசுகின்றனர்.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
Daily at 4-45, 7-00 & 9-45
NEVADA SMITH
(Cinemascope)

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி சரோஜாதேவி நடித்த
வாழவைத்த தெய்வம்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
Roger Hanin
Margaret Lee
in
AN ORCHID FOR A TIGER
A Secret Agent Film in Color

REGAL JAFFNA
Time: 4-45 7-00 p. m.
9-45 p. m.
Laurence Harvey
Lee Remick
in
THE RUNNING MAN


## தாலிக் கொடியை திருடினாராம்

### சந்தேக நபர் ரிமாண்டில்

காங்கேசன்துறை, செவ்.

அச்சுவேலி நாவற்காட்டைச் சேர்ந்த இளையவன் இரத்தினம் என்பவரின் ஆயிரம் ரூபாய் பெறுமதியான தாலிக்கொடியை இம்மாதம் 1-ந் திகதி களவாடியதாக சந்தேகத்தின் பேரில் அளவெட்டி தெற்கைச் சேர்ந்த இராமன் நாகராசா என்பவரை காங்கேசன் துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சிவபாதம் கைது செய்து நேற்று மல்லாகம் தற்காலிக மாஜிஸ்டிரேட் திரு. பாலசிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்தார். தாலிக்கொடி காங்கேசன் துறைப் பொலிசாரால் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபரை தற்காலிக மாஜிஸ்டிரேட் இம்மாதம் 8-ந் திகதி வரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

## வரதராஜ பெருமாள் ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

வண்ணார்பண்ணை வெங்கடேசப் பெருமாள் ஆலய வருடாந்த உற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. பதினேராம் திகதி தேர் உற்சவமும் 12 ந்திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## தமிழரசின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யின் தேர்தல் குழுவினால் ஒரு அபேட்சகர் நியமிக்கப்படுவாரெனவும் தெரிவித்தார். செனட்டர் மசூர் மௌலானாவையே அபேட்சகராக இங்குநிறுத்த அதிகமான செயற்குழு உறுப்பினர் ஆதரவு தெரிவித்ததாக அறியப்படுகிறது.

தமிழரசுக்கட்சியின் சார்பிலான செனட்டர் நியமனம்பற்றி கட்சி இன்னமும் முடிவான தீர்மானமெதுவும் மேற்கொள்ளவில்லை யெனக் கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## கோடீஸ்வரன் வழக்கு நிதி

கோடீஸ்வரன் வழக்குஅப்பீல் நிதிக்காக கட்சிப்பணத்திலிருந்து ரூபா 1000 வழங்குவதெனவும் அமரர் ராஜவரோதயத்தின்நினைவுதினக் கூட்டத்தை இம்மாதம்18ம் திகதி திருமலையில் கொண்டாடுவதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## யாழ்.மாவட்டசனசமூக

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

மராணி, ஜி. நகுலேஸ்வரி, 400 யார் ஓட்டம் அதிமேற்பிரிவு: எம். ஜோர்ஜ், எஸ். தட்சணாமூர்த்தி, எஸ்.மகேந்திரன், மேற்பிரிவு: கே. சாந்தரூபன், என். வாமதேவன், ஆர். அலோசியஸ்.

4X400 யார் அஞ்சல்ஓட்டம் மேற்பிரிவு: நல்லூர் தெற்கு சனசமூக நிலையம்' அரியாலை சனசமூகநிலையம், நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலையம். அதிமேற்பிரிவு: அரியாலை சனசமூக நிலையம், கொக்குவில் மனோன்மணி சனசமூகநிலையம், சென். ரோச் சனசமூக நிலையம். கீழ்ப்பிரிவும் மத்திய பிரிவும்: கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையம், ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையம், சென். ரோச் சனசமூக நிலையம். அதிமேற்பிரிவு: அரியாலை சனசமூக நிலையம், கொக்குவில் சனசமூகநிலையம், நல்லூர் தெற்கு சனசமூக நிலையம். பெண்கள் கீழ்ப்பிரிவு: அரியாலை, நல்லூர் தெற்கு, சென். மேரிஸ். [வி.நி.]

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் கந்தமடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நவராத்திரி விழா இன்றுதொடக்கம்12ந்திகதி வரை கொண்டாடப்படவிருக்கிறது. இந் நாட்களில் சக்தி வழிபாட்டுடன் விசேட பூசையும் இடம் பெறும்.

ஃ ஃ ஃ

சுழிபுரம், புதன்

பண்ணாகம் தெற்கு ஸ்ரீ முருகன் சன சமூக நிலையத்தில் நவராத்திரிவிழா இன்று தொடக்கம் 12-ந் திகதி வரை கொண்டாடப்படவிருக்கிறது. அந்நாட்களில் பெரியார்களின் சொற்பொழிவுகளும், கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெறும்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், புதன்

அல்வாய் வடக்கு வீரபத்திரர் கோவிலில் இன்று தொடக்கம் ஒன்பது தினங்கள் நவராத்திரியை முன்னிட்டு விசேஷ பூசையும், ஆராதனையும் நடைபெறும். மறுநாள் மானம்பூ திருவிழா நடைபெறும்.

ஃ ஃ ஃ

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலயத்தில் நவராத்திரிவிழாவையொட்டி இன்று மாலை 5-30 மணிக்கு கொலு அம்மன் பூஜையும், இரவு 7 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், பூதவாகனத்தில் அலங்காரக் காட்சியும் நடைபெறும்.

## 3000 ஊழியருக்கு அண்ணா அபயம்

புதுடில்லி, அக். 2

தமிழ் நாட்டில் மூடப்பட்டிருக்கும் ஜவுளி ஆலைகள் திறக்கப்படுமென்றும் இதற்கு மத்திய அரசாங்கம் உதவும் என தாம் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை இங்கு தெரிவித்தார்.

மத்திய வர்த்தக மந்திரி திரு. தினேஷ்சிங்குடன்பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே தாம் இவ்வாறு தெரிவிப்பதாக திரு. அண்ணாதுரை கூறினார்.

இவ்விதம் மூடப்பட்டிருக்கும் ஜவுளி ஆலைகள் திறக்கப்பட்டால் மூவாயிரத்துக்கு அதிகமான ஊழியர்கள் மீண்டும் வேலை பெறுவார்கள்எனவும் திரு. அண்ணாதுரை தெரிவித்தார்.

## மூக்குக் கண்ணாடி யாருடையது?

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் கே.கே. எஸ். வீதியிலுள்ள 'ஆனந்தபவன்' ஓட்டலில் மூக்குக் கண்ணாடி 'கேசு'டன் இரு வாரத்துக்கு முன்னர் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர்பெற்றுக் கொள்ளலாம்.

## பங்களூரில் தமிழ் மண்டபம்

பங்களூர், அக். 3

பங்களூர் தமிழ்ச் சங்கத்தினர் நான்கு லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட தமிழ் சங்க மண்டபம் மைசூர் முதலமைச்சர் திரு. நிஜலிங்கப்பாவினால் திறந்து வைக்கப்பட்டது.

இவ் வைபவத்தில்கலந்து கொண்டு உரை நிகழ்த்திய தமிழக கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ் செழியன்இருஇராஜ்யங்களின் நல்லுறவை வலுப்படுத்த இது மேலும் உதவும் எனஎடுத்துக் கூறினார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org